[2003 மே 5

387—

குடிநீர்க் குழாய்கள்

***31126—திரு. ராதாரவி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை சுப்பிரமணிய முதலி தெரு மற்றும் வீனஸ் தெருக்களில் குடிநீர்க் குழாய்கள் பழுதடைந்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீரமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை சுப்பிரமணிய முதலி தெருவில் அமைந்துள்ள 100 மில்லி மீட்டர் விட்டமுள்ள பழைய வார்ப்பிரும்புக் குடிநீர்க் குழாயினை 250 மீட்டர் நீளத்திற்கு கசிவுநீரைக் கண்டறிந்து, அவற்றினைச் சரிசெய்து, மாற்றியமைத்து புதிய குடிநீர் வார்ப்பிரும்புக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. வி.எஸ்.முதலி தெருவில் அமைந்துள்ள 100 மில்லி மீட்டர் விட்டமுள்ள குடிநீர்க் குழாயினை ஆய்வு செய்ததில் அக்குழாய் நல்ல நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது. தற்போது இத்தெருக்களில் தடையின்றி அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ராதாரவி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணிய முதலி தெருவில் குடிநீர்க் குழாய்களைச் சரிசெய்து, குடிநீர் சீராக விநியோகம் செய்யப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கு சைதை தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சைதை தொகுதியில் மொத்தம் 891 தெருக்கள் இருக்கின்றன. இதில் 230 தெருக்களில் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறையும், சில தெருக்களில் 3 மணி நேரத்திற்கு ஒரு முறையும் சீராகத் தண்ணீர் விடப்படுகிறது. இருந்தாலும், மீதமுள்ள தெருக்களில் சரியாகத் தண்ணீர் வராததற்குக் காரணம்—நான் கடந்த ஆட்சியைப் பற்றிக் குற்றம் சொல்லவில்லை. அவர்கள் குழாய்களைப்

2003 மே 5]

போட்டிருக்கிறார்கள். இருந்தாலும்—இந்த மெயின் குழாயைக் ஆழத்திலும், சர்வீஸ் குழாயைக் மேல் மட்டத்திலும் பதித்திருப்பதால், போதிய அழுத்தமின்மை காரணமாகக் குடிநீர் சரியாக வருவதில்லை. அதனால் மெயின் குழாயை மேல்மட்டத்திலும், சர்வீஸ் குழாயைக் கீழ்மட்டத்திலும் அமைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராதாரவி அவர்கள் மெயின் குழாயை மேல்புறமாகவும், சப்ளை செய்கின்ற குழாயைக் கீழ்ப்புறமாகவும் அமைத்து, அது சரி செய்யப்படுமா என்ற அந்தக் கேள்வியை இங்கே முன்வைத்தார்கள். அந்த அடிப்படையில் உடனடியாக அதற்குத் தீர்வு காணமுடியாது. அந்தக் காரணத்தைக்கொண்டு, தற்சமயம் லாரிகள் மூலமாக சர்வீஸ் செய்யப்படாத தெருக்களுக்கு, குடிநீர் சப்ளை செய்யப்படாத தெருக்களுக்கு, உடனடியாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எதிர்வரும் கோடையைக் கணக்கிட்டு மே மாதத்தில் 2000 லாரி நடைகள் மூலமாகத் தொடர்ந்து தண்ணீர் தர வேண்டும், ஜூனிலிருந்து அக்டோபர் வரை 3000 லாரி நடைகள் மூலமாகத் தொடர்ந்து சென்னை நகர் வாழ் மக்களுக்கு முழுமையாகக் குடிநீர் தரப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்கள். அந்த அடிப்படையிலே தற்போது மக்களின் தேவையைக் கருதி, அந்த சைதை பகுதியில் 3-5-2003 முதல் மேற்கண்ட 2 தெருக்களுக்கும் கூடுதலாக லாரி நடைகள் மூலமாகத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்து, அமர்கின்றேன்.

திரு. ராதாரவி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆற்காடு சாலையை மெட்ரோ-2 திட்டத்தில் இணைத்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அம்மா அவர்கள் 2000 லாரிகளை அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று. 60 லாரிகளை சைதை தொகுதிக்கு ஒதுக்கினால் நிச்சயமாக இந்தத் தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள நிலையில் மக்களுக்கு ஒரு சந்தோஷமான

செய்தியாக இருக்கும். அதைப்போல 50 பகுதிகளில் இந்திய மார்க்-2 அடிபம்புகள் தேவைப்படுகின்றன. அதையும் அமைத்துக் கொடுத்து, தொகுதி மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், சென்னை மாநகர மக்களுக்கு முழுமையாகக் குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டி, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். அந்த அடிப்படையில் தற்போது நகரில் 5808 இந்திய மார்க்-2 குழாய்கள் உள்ளன. ஜூலை 2003-க்குள் மேலும் சுமார் 500 புதிய இந்திய மார்க்-2 குழாய்கள் அமைக்க ரூ. 2 கோடியே 20 இலட்சம் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, அது சைதை பகுதி மக்களுடைய தேவைக்கு அத்தியாவசியத் தேவை என்றால் இந்த அரசு அதைப்பற்றி சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், சென்னை மாநகர வாழ் மக்களுக்குத் தற்சமயம் குடிநீர் செல்லாத பகுதிகளுக்கு, குடிநீர்க் குழாய்கள் இணைப்பு இல்லாத பகுதிகளுக்கு தொட்டிகள் மூலமாக, லாரி நடைகள் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் 3400 குடிநீர்த் தொட்டிகள் அங்கு அமைந்துள்ளன. குடிநீர்க் குழாய் இணைப்பு இல்லாத பகுதிகளுக்கு மேலும் இந்த ஆண்டு 600 குடிநீர்த் தொட்டிகள் வாங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு, உத்தரவிட்டுள்ளது என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 388, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

388—

கால்நடை மருந்தகங்கள்

***23554—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—